بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** *(அய்யதஹுல்லலாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)*

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசல், இலண்டன்**

January 10 2014

**தமிழாக்கம் : மவ்லவி M. ரஃபீக் அஹ்மது சாஹிப்**

# செயல் சீர்திருத்தத்திற்கான அறிவு மற்றும் மன உறுதி

***தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:***

கடந்த இரண்டு ஜுமுஆவிற்கு முன்பு நான் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் குத்பாக்களின் ஒளியில் செயல் சீர்திருத்தம் தொடர்பான சில விஷயங்களை சில குத்பாக்களில் கூறியிருந்தேன். அதற்கான சில காரணங்களையும் விளக்கிக் கூறியிருந்தேன். அவை செயல் சீர்திருத்தத்தில் தடை ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது. இந்த தடைகளை அகற்ற வேண்டிய தேவை இருக்கின்றது என்றும் கூறியிருந்தேன். ஒட்டுமொத்த ஜமாஅத் அளவில் செயல் சீர்திருத்தத்தில் நாம் உயர்வான தரத்தைப் பெற வேண்டும். செயல் தொடர்பாக நமக்கு இருக்கின்ற தடைகள் கொள்கை ரீதியாக ஏற்படும் தடைகளை விட மிகவும் கடினமானதாக இருக்கின்றது என்ற விஷயத்தையும் நான் விளக்கிக் கூறியிருந்தேன். இந்த விஷயம் தொடர்பாக இன்று நான் மேலும் சில கருத்துக்களைக் கூறுவேன்.

நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பிரச்சாரம் மற்றும் வருகையின் நோக்கம் கொள்கை அளவிலான சீர்திருத்தத்தை மட்டும் ஏற்படுத்துவதற்காக அல்ல. அடியானுக்கு இறைவனோடு தொடர்பை ஏற்படுத்துவது செயல்களில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவது ஆகியவை அவசியமானதாகும். இதற்காகவே அவர்கள் வந்துள்ளார்கள் என்பதை அவர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள். அடியார்களிடையே பரஸ்பரம் ஒருவர் மற்றவரது உரிமையைச் செலுத்துவதும் கூட அவர்களது வருகையின் ஒரு நோக்கமாக இருக்கின்றது. இந்த எல்லா விஷயங்களும் செயல்களுடன் தொடர்புடையவையாக இருக்கின்றன. நல்ல செயல்களைச் செய்வதன் மூலம் அல்லாஹ்விற்குரிய உரிமையும் செலுத்தப்படுகிறது. அடியாருக்குரிய உரிமையும் செலுத்தப்படுகிறது.

***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்:***

நினைவில் கொள்ளுங்கள்! எதுவரை செயல் இல்லாமல் இருக்கின்றதோ அதுவரை நாவால் சொற்களைக் கூறுவதால் மட்டும் எந்தப் பயனும் ஏற்படாது.

***பிரிதொரு சந்தர்ப்பத்தில் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:***

உங்களது ஈமானை எடை போட்டுப் பாருங்கள். செயல், ஈமானின் அணிகலன் ஆகும். மனிதனின் செயலின் நிலை சரியில்லாமல் இருந்தால் அவருக்கு ஈமானும் கிடைக்காமல் போய்விடும்.

எனவே, நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பிரச்சாரத்தை பயனுள்ளதாக ஆக்கியவாறு அவர்களது வருகையின் நோக்கத்தை முழுமையடையச் செய்ய வேண்டும் என்றால் நம்மில் ஒவ்வொருவரும் நமது செயல் சீர்திருத்தத்தில் ஏற்படும் தடைகளை அகற்றுவதற்காக முயற்சி செய்யும் போதுதான் அது நடக்கும். ஏனென்றால், இந்த செயல் அளவிலான சீர்திருத்தம் தான் மற்றவர்களது கவனத்தை நம் பக்கம் திருப்பி விடும். இதன் விளைவாக நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள்து பிரச்சாரத்தை நிறைவடையச் செய்வதில் அவர்களுக்கு உதவுபவர்களாகவும் ஒத்துழைப்பு நல்குபவர்களாகவும் ஆக முடியும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்று நாம் சிந்திக்க வேண்டும். ஏனென்றால், நாம் வெற்றி பெறுவதற்கான மிகப்பெரும் ஆயுதங்களில் ஒன்றாக செயல் சீர்திருத்தமும் இருக்கின்றது. நம்மை நாமே சீர்திருத்திக் கொள்வதன் மூலமாகவே மற்றவர்களைச் சீர்திருத்துவதற்கான ஆற்றல் நம்மிடம்

உருவாகும். நாம் வெற்றி பெறுவதன் நோக்கம் எவரையும் நமக்கு கீழ் கொண்டு வருவதோ அல்லது ஏதாவது உலக நோக்கத்தைப் பெறுவதோ அல்ல. மாறாக, உலகின் உள்ளத்தை அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களது காலடியில் கொண்டு வர வேண்டும் என்பதே நமது நோக்கமாகும். ஆனால், நமக்கும் மற்றவர்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லாமல் இருந்தால் நமது விஷயங்களைக் கேட்க வேண்டும் எனறு உலகிற்கு என்ன தேவை இருக்கின்றது?

எனவே, நாம் நமது செயல் அளவிலான ஆற்றலை வலுப்படுத்த வேண்டியது உள்ளது. பிறகு வலுவாக அதில் நிலைத்திருக்க வேண்டியது உள்ளன. மற்றவர்களைக் கண்டு அஞ்சுவதற்குப் பதிலாக உலகம் நம்மைக் கண்டு அஞ்ச வேண்டும். இத்தகைய திகிலை ஏற்படுத்த வேண்டியது அவசியமானதாகும். இன்றைய நாட்களில் உலகிலுள்ள மக்கள் உலக விஷயங்களில் ஈடுபடுவது மற்றும் பௌதீகத்தில் மூழ்கியிருப்பது ஆகியவற்றால் அதன் தாக்கத்திற்கு ஆளாகி இருக்கும் போது, நாம் முன்பை விட அதிகமாக நாம் நமது செயல் நிலைமைகள் மீது பார்வையைச் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். இத்தகைய பார்வையை வைத்தவாறு நம்மை நாமே உலகிற்கு அஞ்சுகின்ற நிலையிலிருந்து வெளியேற்றிக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். உலகையும் இத்தகைய ஷய்த்தானிய நிலைமைகளிலிருந்து வெளியேற்ற வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் அல்லாஹ்விற்குரிய உரிமையைச் செலுத்துபவர்களாக நாமும், உலகிலுள்ள பெரும்பாலான மக்களும் ஆக வேண்டும். ஆனால், இந்த வழியில் பல தடைகள் உள்ளன. இதற்காக நாம் நம்மிடம் எத்தகைய ஆற்றலை உருவாக்க வேண்டும் என்றால் அதன் மூலம் நாம் இந்த தடைகளை அகற்ற வேண்டும். நாம் உலகை எதிர்த்து நிற்பதற்காக சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இதனை நம்மில் ஒவ்வொருவரும் செயல்படுத்த வேண்டும். பிறகு அவற்றைப் பேண வேண்டும். இதற்காக நாம் நமது நஃப்ஸை தியாகம் செய்ய வேண்டும். இதற்கான ஒரு சுற்றுச்சூழலை உருவாக்க வேண்டும். எதுவரை நாம் இவற்றை பெறவில்லையோ அதுவரை நாம் வெற்றி பெற முடியாது.

கடந்த ஒரு குத்பாவில் நான் கூறியிருந்தது போன்றே இன்று உலகம் சுருங்கி விட்டது. நமக்கு அருகில் வந்து விட்டது. இன்னும் சொல்வதென்றால், உலகமே ஒரு நகரமாக மாறி விட்டது. ஓர் ஊராகி விட்டது என்றும் கூறலாம். ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள தீமைகள் எலக்ட்ரானிக் மீடியா மூலமாக ஒவ்வொரு வீட்டிற்கும் வந்து சேர்ந்து விட்டது. ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவிலுள்ள ஒவ்வொரு நாட்டிலுமுள்ள நல்ல விஷயங்களும் ஒவ்வொரு வீட்டிற்கும் வந்து சேர்ந்து விட்டது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது தீமைகள் பரவுவதன் வேகமும் அளவும் நன்மைகள் பரவுவதை விட மிக அதிக வேகத்தில் இருக்கின்றது. இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் நான் கூறியிருந்தது போன்றே நன்மை மற்றும் தீமை ஆகியவற்றின் அளவுகோல் மாறி விட்டது. எந்தவொரு விஷயம் இஸ்லாமிய சமுதாயத்தில் தீமையாக இருக்கின்றதோ அது ஏறக்குறைய மார்க்கமற்ற சமுதாயமாக இருக்கின்ற உலகவாதிகளின் சமுதாயத்தில் ஒன்றுமற்றதாக கருதப்படுகிறது. எதனை நாம் தீயதாகக் கருதுகின்றோமோ அது இவர்களது பார்வையில் மிகவும் சாதாரணமான ஒரு விஷயமாக இருக்கின்றது. இன்னும் சொல்வதென்றால் அவை நன்மைகளாகக் கருதப்படுகிறது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதற்கு உதாரணம் கூறியுள்ளார்கள். மேற்கத்திய சமுதாயத்தில் நடனமாடுகின்ற வழக்கம் இருக்கின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது காலத்தில் இது இந்த அளவு பொதுவானதாக இருக்கவில்லை அல்லது குறைந்தபட்சம் இதற்காக குறிப்பிட்ட இடங்களுக்கு செல்ல வேண்டியது இருந்தது. ஆனால், இன்றைய நாட்களில் டி.வி. –யும் இன்டர்நெட்டும் எல்லா இடங்களிலும் இதனை கொண்டு வந்து சேர்த்து விட்டது. வீடுகளில் பொழுதுபோக்கு என்ற பெயரில் நடனமாடுகின்ற கிளப்புகள் உருவாகி விட்டன. சில வீடுகள் நடனம் நடைபெறுகின்ற வீடுகளாகவே உள்ளன. குறிப்பாக திருமணங்கள் நடக்கும் போது பொழுதுபோக்கு மற்றும் மகிழ்ச்சி என்ற பெயரில் வீணான நடனங்களை ஆடுகின்றனர். ஓர் அஹ்மதி வீடு இவற்றிலிருந்தும் முற்றிலும் தூய்மையாக இருக்க வேண்டும். இதன் பக்கம் குறிப்பான கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

எவ்வாறிருப்பினும், நான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள விஷயங்களை மேற்கோளாகக் காட்டி இவற்றை கூறிக் கொண்டிருக்கின்றேன். அவர்கள் கூறியுள்ளார்கள். இப்போது மேற்கத்திய நாடுகளில் நடனம் ஆடுகின்ற வழக்கம் இருக்கின்றது. ஆனால் இதற்கு முன்பு மக்கள் இதனை தீயதாகக் கருதி வந்தனர். இப்போது மெதுமெதுவாக மக்கள் இதை செய்யத் தொடங்கி விட்டனர். முதலில் ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவரது கையைப் பிடித்துக் கொண்டு ஆடினார்கள். பிறகு ஒருவர் மற்றவருக்கு அருகில் தமது முகத்தைக் கொண்டு சென்றவாறு ஆட ஆரம்பித்தனர். பிறகு இவர்களுக்கிடையில் இருந்து வந்த தூரமும் குறைய ஆரம்பித்து விட்டது. நான் ஏற்கனவே கூறியிருந்தது போன்றே இப்போது நடனம் என்ற பெயரில் கீழ்த்தரமான விஷயங்களில்

ஈடுபடுவதற்கு ஒரு எல்லையே இல்லாமல் போய் விட்டது. நிர்வாண ஆடைகளுடன டி.வி –யில் நடனம் ஆடுகின்றனர். இவையெல்லாம் ஏன் பரவியது? தீமைகளைப் பரப்புகின்றவர்கள் இது தீமை என்று உலகம் கூச்சல் போட்ட பிறகும் கூட தீமைகளைப் பரப்புவதில் உறுதியாகத் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். உலகம் கூறிய விஷயங்களை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இறுதியில் ஒரு சமயத்தில் அவர்கள் இதில் வெற்றி பெற்று விட்டனர்.

இப்போது முஸ்லிம்களின் நாடாகிய பாகிஸ்தானில் உள்ள அதன் டி.வி –யில் கூட பொழுதுபோக்கு என்ற பெயரில், சுதந்திரம் என்ற பெயரில் வீணான கீழ்த்தரமான விஷயங்கள் காட்டப்படுகின்றது. நிர்வாணம் தெரிய வருகிறது. ஆக, தீமை தொடர்ந்து நிலைத்து நின்றதால் உலகில் உள்ளவர்களின் மூளையில் அது ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டது. எனவே, இதை எதிர்த்து நிற்பதற்கு மிகப்பெரும் செயல் திட்டமும், அதற்காக தியாகம் செய்ய வேண்டிய தேவையும் இருக்கின்றது. இது நடக்கவில்லையென்றால் பிறகு நாம் நமது நோக்கத்தில் வெற்றி பெற முடியாது.

எனவே, இதற்காக அதிகம் சிந்திப்பதும், கவனமாகச் சிந்திப்பதும், இதற்காக உழைக்க வேண்டியதும அவசியமானதாகும். எந்த விஷயங்களைப் பின்பற்றிச் செயல்படுவதன் மூலமாக இந்த தடைகளை நம்மால் அகற்ற முடியுமோ அந்த விஷயங்களைப் பின்பற்றிச் செல்வது அவசியமானதாகும். அவற்றைப் பயன்படுத்துவதன் மூலமாகவே இந்த தடைகளை அகற்றுவதற்கான ஆற்றல் நம்மிடம் உருவாக முடியும். இதன் காரணமாக நாம் தீமைகளை எதிர்த்து நிற்க முடியும். இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்குள்ள வழிகளை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மிகவும் சிறந்த முறையில் விளக்கி கூறியுள்ளார்கள். அதாவது செயல் சீர்திருத்தத்திற்காக இந்த விஷயங்கள் ஒரு மனிதனிடம் உருவாகி விட்டால் மட்டுமே வெற்றியை அவன் பெற முடியும். இவை மூன்று விஷயங்களாகும். 1) எண்ணத்தின் ஆற்றல் 2) சரியான முழுமையான அறிவு 3) மூன்றாவது செயலில் ஆற்றல் ஆகும். ஆனால் உண்மையில் அடிப்படையான ஆற்றல்கள் இரண்டே ஆகும். எண்ணத்தின் ஆற்றல் மற்றும் செயலின் ஆற்றல். இந்த இரண்டிற்கும் இடையில் வைக்கப்பட்டுள்ள விஷயம் சரியான முழுமையான அறிவாகும். அது இந்த இரண்டு அடிப்படையான ஆற்றல்கள் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. சரியான அறிவு இருப்பது செயல் ஆற்றல் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எண்ணத்தின் ஆற்றல் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

எவ்வாறிருப்பினும், முதலில் நாம் நமது மூளையில் பதிய வைக்க வேண்டிய விஷயம், எண்ணத்தின் ஆற்றல் மற்றும் செயல் ஆற்றல் ஆகியவைதான் அடிப்படையான விஷயங்களாகும். அவை செயல் சீர்திருத்தத்தின் மீது தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதற்காக நாம் எண்ணத்தின் ஆற்றலை மிகவும் வலுவடையச் செய்வது அவசியமானதாகும். மேலும் செயல் ஆற்றலில் உள்ள குறையை அகற்ற வேண்டியதும் அவசியமானதாகும். எந்தவொரு தீமையையும் தடுப்பதற்கான நமது எண்ணம் வலுவாக இருந்தால் தான் தீமைகளைத் தடுக்க முடியும். செயல்களைச் செய்வதற்கான ஆற்றலிலுள்ள பலவீனங்களையும் குறையையும் நாம் அகற்றும் போதுதான் நமது எண்ணத்தின் ஆற்றலும் நமக்கு பயன்தரக்கூடியதாக இருக்கும். இது இல்லாமல் சீர்திருத்தம் ஏற்பட முடியாது. நமது எண்ணத்தில் ஆற்றல் எப்படி இருக்கின்றது? என்ற இந்த அம்சத்தின் அடிப்படையில் நாம் ஆய்வு செய்யும் போது எண்ணத்தைப் பொருத்தவரையில் இதில் மிகவும் குறைவாகவே குறை இருப்பது தெரிய வருகிறது. எண்ணத்தைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய ஜமாஅத்திலுள்ள பெரும்பாலான நபர்கள் தக்வாவும் தூய்மையும் ஏற்பட வேண்டும் என்றே விரும்புகின்றனர். அல்லாஹ்வின் அன்பையும் அவனது நெருக்கத்தையும் பெற விரும்புகின்றனர்.

***ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதனை இவ்வாறு விளக்கிக் கூறியுள்ளார்கள்:***

இந்த விஷயங்கள் நமது எண்ணத்தின் ஆற்றல் வலுவாகவும் சக்தியுடனும் இருக்கின்றன என்பதை நிரூபிக்கின்றது. அவ்வாறிருந்தும் சரியான விளைவுகள் ஏற்படுவதில்லை. பிறகு நிச்சயமாக இரண்டு விஷயங்களில் ஒன்றுதான் நடந்திருக்க வேண்டும். செயலுக்கான எண்ணத்தின் ஆற்றல் எந்த அளவு இருக்க வேண்டுமோ அந்த அளவு நம்மிடம் இல்லை. ஆனால் கொள்கை ரீதியிலான சீர்திருத்தத்திற்காக எந்த அளவு எண்ணத்தின் ஆற்றல் தேவைப்படுகிறதோ அது நம்மிடம் இருக்கின்றது. அதனால் கொள்கை சீர்திருத்தம் நம்மில் ஏற்பட்டு விட்டது. ஆனால் செயல் சீர்திருத்தத்திற்காக தேவைப்படும் எண்ணத்தின் ஆற்றல் நம்மிடம் இல்லாமல் இருப்பதால் செயல்களைச் சீர்திருத்துவதில் நாம் வெற்றி பெற முடியவில்லை. இறைவனது அடியாராக நாம் இருப்பதிலும் சில குறைகள் உள்ளன என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இறைவனின் அடியாராகிய நாங்கள் இருக்கின்றோம் என்று நாம் வாதம் செய்கின்றோம். அதிலும் சில குறைகள் இருக்கின்றன. இதன் காரணமாக செயலின் ஆற்றல் செயல்படாமல் இருக்கின்றது. அது எண்ணத்தின் ஆற்றல் ஏற்படுத்துகின்ற தாக்கத்தை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றது. அதாவது நமது செயல் ஆற்றல் செயல்படாமலும் எண்ணத்தின் ஆற்றல் ஏற்படுத்துகின்ற தாக்கத்தை ஏற்றுக்

கொள்ளாமலும் இருக்கின்றது. அல்லது இந்த விஷயங்களை ஏற்றுக் கொள்வதற்கு எத்தகைய உதவி செய்பவர்கள் மற்றும் ஒத்துழைப்பு நல்குபவர்கள் தேவைப்படுகின்றனரோ அவற்றில் பலவீனம் இருக்கின்றது.

இத்தகைய நிலைமையில் எதுவரை நாம் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஆற்றல் அல்லது செயல் ஆற்றலின் தாக்கத்தை ஏற்றவாறு ஒரு செயலைச் செய்கின்ற ஆற்றலுக்கான சிகிச்சையைச் செய்யாமல் இருந்தால் எந்தப் பயனும் ஏற்படாது. உதாரணமாக, ஒரு மாணவர் இருக்கின்றார். அவர் தனது பாடத்தைப் படிக்கின்றார். ஆனால் அதை அவர் தனது நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை. எதுவரை அவரது மூளையை சரியாக ஆக்க முடியவில்லையோ அதுவரை அவருக்கு எவ்வளவு பாடங்களைக் கொடுத்தாலும், எத்தனை முறை அவரை அதனை மனப்பாடம் செய்ய வைத்தாலும் அல்லது மனப்பாடம் செய்ய வைக்க முயற்சி செய்தாலும் அவர் அதை நினைவில் வைத்திருக்கமாட்டார். எனவே மூளையை சரியாக வைத்திருப்பதற்குரிய காரணங்கள் என்ன என்பதை அறிய வேண்டும். அதன் மூலமாகத்தான் அவருக்கு சரியான வழிகாட்டலை வழங்க முடியும். அல்லது பாடத்தைப் படிப்பதற்கான வழிமுறையை மாற்ற வேண்டும். பாகிஸ்தானில் படிக்கின்ற மாணவர்கள் அங்குள்ள வழக்கத்திற்கேற்ப மனப்பாடம் செய்தவாறு எல்லாவற்றையும் படிக்கின்றனர். அவை அவர்களுக்கு புரிந்தாலும் சரி புரியாவிட்டாலும் சரி. இவ்வாறே அவர்கள் தயாராகுகின்றனர். இதில் அவர்களுக்கு பெரும் திறமை இருக்கின்றது. புத்தகத்திலுள்ள ஒவ்வொரு சொல்லும் சிலருக்கு மனப்பாடமாகத் தெரியும். ஆனால் இவர்கள் இங்கு மேற்கத்திய நாடுகளிலுள்ள கல்வி அமைப்பின் கீழ் வரும்போது இங்கு பல்வேறு வகையான வழிமுறைகள் இருப்பதால் ஒவ்வொரு விஷயத்தையும் புரிந்து படிக்க வேண்டியது வரும். எனவே இதனால் சில சமயங்களில் இப்படியும் நடக்கின்றது. அதாவது அங்கு குறைவான மதிப்பெண்களைப் பெறுபவர்கள் இங்கு அதிக மதிப்பெண்களைப் பெறுகின்றனர். மிக விரைவாக இங்குள்ள அமைப்பிற்கு ஏற்றவாறு அவர்கள் தங்களை வடிவமைத்துக் கொள்கின்றனர். அங்கு அதிகமான மதிப்பெண்களைப் பெறுபவர்கள் இங்கு வந்து குறைவான மதிப்பெண்களைப் பெறுகின்றனர். ரப்வாவிலுள்ள நமது ஜமாஅத் பள்ளிக்கூடங்களை தவிர்க்க முடியாத சில காரணங்களால் அரசாங்க போர்டிலிருந்தும் அதை விலக்கியவாறு மற்றொரு போர்டுடன் அதனை இணைத்து பதிவு செய்த போது அங்கு தேர்விற்கான வழிமுறை வேறு விதமாக இருந்ததால் பல மாணவர்களும் நாங்கள் பாகிஸ்த்தானிலுள்ள பொதுவான கல்வி அமைப்பின் கீர் நடக்கின்ற தேர்வுகளில் எந்த அளவு அதிகமாக மதிப்பெண்கள் பெற்றோமோ அவ்வாறு இப்போது எங்களால் பெற முடியவில்லை. என்ன நடக்கிறது என்று எங்களால் புரிந்து கொள்ளவும் முடியவில்லை என்று எழுதுகின்றனர்.

எனவே, சில நேரங்களில் மூளையுடன் மட்டும் இதற்கு தொடர்பு இருப்பதில்லை. மாறாக, மூளை சரியாக இருந்தாலும் அவர்கள் நல்ல முறையில் பாடங்களைக் கற்க முடியாது. மூளையின் பலவீனம் மட்டும் இதற்கு காரணமாக இருக்க முடியாது. வேறு காரணங்களும் இருக்கும். மூளையும் பலவீனமாக இருந்தால் பிறகு முற்றிலும் கடினமாகி விடும். மனனம் செய்வதற்கான வழிமுறைகளை மாற்ற வேண்டியது வரும். இங்கு இத்தகு பலவீனமான மூளையுடைய பிள்ளைகளுக்கென்றே சில குறிப்பிட்ட பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அங்கு அவர்கள் மீது குறிப்பான கவனம் செலுத்தப்படுகிறது. இதனால் பலவீனமான மூளையுள்ள இதே பிள்ளைகள் பிறகு நன்கு படித்தவர்களாக மாறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும், செயல் வழிமுறையும் கூட சில நேரங்களில் மனிதனை கவலையில் ஆழ்த்தி விடுகின்றது. சரியான வழிமுறையைப் பின்பற்றாமல் இருந்தால் வெற்றியும் கிடைக்காமல் போய் விடுகின்றது. எனவே, எந்தவொரு பணியைச் செய்வதற்காகவும் எந்த செயல்முறை கூறப்படுகின்றதோ மூளையையும் அதற்கேற்ப வடிவமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இது இல்லாமல் வெற்றி பெறுவது சாத்தியமற்றதாகும்.

எனவே, நாம் நமது செயல் சீர்திருத்தத்தின் நிலைமைகளின் பக்கமும் பார்க்க வேண்டும். நமது நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் நமது மூளையின் எந்தப் பகுதியில் தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமாக நமது செயல் சீர்திருத்தம் ஆரம்பமாகி விடுமோ அந்தப் பகுதியில் அது தனது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்த வழியில் வருகின்ற தடைகளை அகற்றுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இறைவனின் அடியாராக இருப்பதில் நமது தரம் எவ்வாறு இருக்கின்றது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். நமது செயல் அளவிலான முயற்சியில் நல்லெண்ணமும் கலப்பற்ற தூய்மையும் பற்றும் எந்த அளவு உள்ளது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

எனவே, இருவிதமான தடைகள் செயல் சீர்திருத்தத்தின் வழியில் குறுக்கிடுகின்றன. ஒன்று, எண்ணத்தின் ஆற்றலிலுள்ள பலவீனம். இரண்டாவது செயல் ஆற்றலிலுள்ள பலவீனம் ஆகும். ஏற்கனவே கூறியிருந்தபடி இவற்றிற்கிடையில் இன்னொன்றும் செயல் சீர்திருத்தத்தில் குறைவு ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கின்றது.

அது அறிவிலுள்ள பலவீனமாகும். இது இரு பக்கத்திலும் தனது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நாம் செயல்ரீதியான வாழ்க்கையில் பார்க்கின்றோம். எண்ணமும் அறிவிற்கேற்பவே செல்கிறது. செயலும் அறிவிற்கேற்பவே செல்கிறது. இதற்கு உதாரணம் இதுவாகும். ஒரு மனிதனுக்கு ஓராயிரம் வீரர்களைக் கொண்ட படை அவனது வீட்டைத் தாக்கப் போகின்றது என்று தெரியாமல் இருந்தால், மேலும் யாரோ ஒன்றிரண்டு பேர்தான் தாக்குதல் நடத்தப் போகின்றார் என்பது மட்டும்தான் அவருக்கு தெரிந்திருக்கின்றது என்றால் அதற்கேற்ப அவர் தயாராகின்றார். அவ்வாறில்லாமல் தாக்குதல் நடத்தப் போகின்றவர்கள் ஓராயிரம் பேர் என்பதை அவர் அறிந்திருந்தால் அவர் அதற்கு தயாராவது வேறு விதத்தில் இருக்கும்.

எனவே அறிவில் குறைவு இருப்பதன் காரணமாக குறை உருவாகி விடுகின்றது. ஆரோக்கியமான அறிவு இருப்பது எண்ணத்தின் ஆற்றலை அதிகப்படுத்தி விடுகின்றது. இவ்வாறே சில நேரங்களில் மனிதன் ஏதாவதொரு பொருளைத் தூக்குவதற்கு முயற்சி செய்கின்றான். அப்பொருள் இலேசானது என்று அவன் நினைக்கின்றான். ஆனால், இது பாரமாக இருக்கும். அதனால் அவன் அதனை தூக்க முடியாது. ஆனால், ஒருமுறை அது பாரமான பொருள் என்பதை அவன் கணித்து விட்டால் பிறகு அதை தூக்குவதற்காக அதிகமாக தனது சக்தியை அவன் பயன்படுத்துகின்றான். அதை தூக்குவதற்கான வழிமுறையையும் அவன் மாற்றுகின்றான். பிறகு அதை அவன் தூக்கி விடுகின்றான். எனவே, எந்தவொரு அதிகப்படியான ஆற்றலும் இரண்டாவது முறை அவனிடம் வரவில்லை. மாறாக சரியான அறிவு இருந்ததன் காரணமாக ஆற்றலும் சரியான வழிமுறைக்கேற்ப ஆற்றலைப் பயன்படுத்துவதும் இருந்தால் அதில் அவனால் வெற்றி பெற முடிந்தது.

எனவே, அல்லாஹ் வழங்கியுள்ள ஆற்றல்களும் தகுதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. அந்த ஆற்றலையும் தகுதியையும் சரியாகப் பயன்படுத்தும் போது எளிதாகப் பணி நடந்து விடுகின்றது. அல்லது சிறந்த முறையில் பணி நடைபெற்று வருகின்றது. இது அறிவின் காரணமாக ஏற்பட்டதாகும். தனது தகுதிகளைச் சரியாக பயன்படுத்தாமல் இருந்தால் பொதுவான விவகாரங்களில் கூட இழப்பு ஏற்பட்டு விடுகின்றது. இந்த வழிமுறையைத்தான் இங்கு செயல் சீர்திருத்தத்திற்காகவும் செயல் அளவிலான பலவீனங்களை அகற்றுவதற்காகவும் நாம் பயன்படுத்துவது அவசியமானதாகும். இதற்காக நமது அறிவை விரிவடையச் செய்வது அவசியமானதாகும். அந்த அறிவிற்கேற்ப சரியான ஆற்றலைப் பயன்படுத்தி நமது பலவீனங்களின் மீது நாம் வெற்றி பெற முடியும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இன்னொரு விஷயத்தையும் கூறியுள்ளார்கள். அல்லாஹ் ஒவ்வொரு மனிதனிடமும் ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஓர் ஆற்றலை வைத்துள்ளான். இதன் மூலமாக இரண்டு பொருள்களுக்கு இடையிலுள்ள ஒப்புமையை அவனால் கண்டு கொள்ள முடியும். அந்த ஆற்றல் இந்தப் பணியைச் செய்வதற்கு நமக்கு இந்த அளவு சக்தி தேவை என்பதை முடிவு செய்கின்றது. மேலும் எல்லா சக்தியும் மனிதனின் கையில் இருப்பதில்லை. மாறாக, அது மூளையில் பாதுகாக்கப்படுகின்றது. எனவே முதன் முறையாக ஒரு பணி நடக்காமல் இருந்தால் – உதாரணமாக, பாரமான பொருளைத் தூக்குவது பற்றி கூறியது போன்றே அங்கு பொருளைத் தூக்க முடியாமல் போன போது மனிதன் மூளையிடம் மேலும் சக்தியை அனுப்பும்படி கேட்கின்றான். இந்த சக்தி வந்ததும் பொருளைத் தூக்குவது எளிதாகி விடுகின்றது. இவ்வாறு ஒப்பீடு செய்கின்ற ஆற்றலும் கூட அறிவின் மூலமாகத்தான் வருகின்றது. அது உட்புற அறிவாக இருந்தாலும் சரி. வெளிப்புற அறிவாக இருந்தாலும் சரி. உட்புற அறிவு என்பது பார்ப்பதும் அனுபவமும் ஆகும். வெளிப்புற அறிவு என்பது வெளியிலிருந்து வரும் சப்தங்களாகும். அவை செவியில் படுகின்றன. வெளியிலிருந்து தாக்குதல் நடத்துபவர்களின் உதாரணம் கூறப்பட்டது. வெளியிலிருந்து தாக்குதல் நடக்கும் போது வெளியிலிருந்து வரும் சப்தங்கள் மனிதனை முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வைக்கின்றது. ஆனால் பாரமான பொருளைத் தூக்குவது தொடர்பாக கூறப்பட்ட உதாரணத்தில் அதனை செய்வதற்கு ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஆற்றல்தான் அதை முடிவு செய்ய முடியும். முதலில் இந்த எடையை உன்னால் தூக்க முடியவில்லை. நீ இதனை குறைந்த எடை என்று நினைத்தாய்.

உதாரணமாக, 10 கிலோ எடையுள்ள பொருள் 5 கிலோ எடையுள்ளதாக நினைத்தாய். அதற்காக குறைவான சக்தியைத்தான் பயன்படுத்தினாய். இப்போது இதை தூக்குவதற்காக 10 கிலோவிற்கு ஈடு தருகின்ற சக்தியைப் பயன்படுத்து. பிறகு அதை உன்னால் தூக்க முடியும். இவ்வாறு ஒப்பீடு செய்து பார்க்கும் ஆற்றலைப் பயன்படுத்தும் வழிமுறையை மேற்கொண்டால் எப்போது மனிதன் இந்த செயல் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நின்றாலும் அவனது ஒப்பிடு செய்து பார்க்கின்ற ஆற்றலானது நான் முயற்சி செய்வதற்கு எந்த அளவு ஆற்றல் தேவைப்படுகின்றது என்பதை அவனுக்கு உணர்த்தும். சில சமயங்களில் சரியான அறிவு இல்லாத காரணத்தால் மனிதன் செயல்களைச் சீர்திருத்த முடியாமல் போய் விடுகின்றது. ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஆற்றலானது அறிவு

இல்லாமல் இருக்கின்ற காரணத்தால் அவனுக்கு சரியான செய்தியைக் கொடுக்காமல் இருக்கின்றது. அதாவது செயல் சீர்திருத்தத்திற்கு எந்த அளவு ஆற்றல் தேவைப்படுகின்றது என்ற செய்தியைக் கொடுக்காமல் இருக்கின்றது.

எனவே, ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஆற்றல் மனிதனை முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வைக்கின்றது. மேலும் இதுதான் அறிவு இல்லாமல் இருப்பதன் காரணமாக அவனை கவனமற்றவனாகவும் ஆக்கி விடுகின்றது. ஒரு பொருளைப் பற்றிய சரியான அறிவு இருந்தால்தான் ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஆற்றலும் உருவாக முடியும். அறிவு இருந்தால் தான் அந்த ஆற்றலை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று மனிதனை அது முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வைக்கும். அறிவு இல்லை என்றால் பிறகு மனிதனால் அந்த பணியைச் செய்ய முடியாது. பிறகு அறிவு இல்லாத காரணத்தால் மனிதன் பாவங்களைச் செய்கின்றான். பாவங்கள் செய்கின்ற மக்களுக்கு மத்தியில் வளர்கின்ற ஒரு சிறுவன் அவர்கள் எப்போதும் பொய் கூறாமல் இந்த உலகில் எதையும் செய்ய முடியாது என்று எல்லா சமயத்திலும் சபைகளில் அவர்கள் பேசுவதைக் கேட்கின்றான். இங்கு நான் இந்த விஷயத்தையும் கூற விரும்புகின்றேன்.

இங்கு Asylum ஆக வருகின்றவர்கள் நீண்ட கதைகள் கூறாமல், பொய்யான கதைகளைக் கூறாமல் நமது Case பாஸ் ஆகாது என்ற சிந்தனை உள்ளவர்களாக இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலரது உள்ளத்தில் ஏன் இத்தகைய சிந்தனை உறுதியாகப் பதிந்து விட்டது என்று தெரியவில்லை. ஆனால் பலமுறை நான் கூறி விட்டேன். சுருக்கமான உண்மையான விஷயத்தைக் கூறினால் Case மிக விரைவாக பாஸ் ஆகி விடுகின்றது. இத்தகைய பல உதாரணங்கள் எனக்கு முன்னால் இருக்கின்றது. பல மக்களும் என்னிடம் இவ்வாறு கூறியுள்ளனர். அதாவது அவர்கள் சுருக்கமான உண்மையான விஷயங்களைக் கூறினார்கள். அதற்கு பிறகு சில நாட்கள் கழிந்ததுமே Case pass ஆகி விட்டது. இதற்காக எங்களுக்கு கொடுக்கப்படும் Mental Torture –ஐ எங்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று கூறுவதே போதுமானதாகும். இதனால் எங்களுக்கும் எங்களது பிள்ளைகளுக்கும் எல்லா சமயத்திலும் பாதிப்பு இருக்கின்றது. பள்ளிக்கூடங்களுக்குப் போக முடியவில்லை. எங்களை இவர்கள் துன்புறுத்துகின்றனர். இவ்வாறு பல விஷயங்களைக் கூற முடியும். பெரும்பாலான Case -கள் இந்த விஷயங்களைக் கேட்ட பிறகு Pass ஆகி விடுகின்றது.

எனவே, உண்மையில் நிலைத்திருக்க வேண்டும். இறைவன் மீது நம்பிக்கையும் வைக்க வேண்டும். இத்தகைய பொய்க் கதைகளை நான் நிதிபதிக்கு முன்னால் கூறினேன் என்று குழந்தைகளுக்கு முன்னால் கூறும்போது குழந்தைகளும் பொய் கூறுவதில் எந்தப் பாவமும் இல்லை என்று கருதுகின்றனர். பொய் சொல்லவில்லை என்றால் ஒருவேளை நமது Case Pass ஆகியிருக்காது. அல்லது நமக்கு இதனால் பலன் கிடைத்திருக்காது என்று இவர்கள் கூறும்போது பொய் தான் எல்லா முன்னேற்றத்திற்குமான சாவி ஆகும் என்ற எண்ணம் உருவாகி விடுகின்றது.

இன்றைய உலகில் உண்மை பேசுகின்ற யார் தான் இருக்கின்றார்? போன்ற எண்ணங்கள் உருவாகி விடுகின்றது. அப்போது குழந்தைகளும் இந்தக் காலத்தில் பொய் கூறாமல் நமக்கு வெற்றி கிடைக்காது என்ற எண்ணம் வந்து விடுகின்றது. இந்த எல்லா விஷயங்களும் குழந்தைகளின் மூளையில் தங்களை விட பெரியவர்கள் கூறும் விஷயங்களைக் கேட்டு உருவாகின்றன. பிறகு அவர்களது அறிவும் ஓர் எல்லைக்குட்பட்டதாக ஆகி விடுகின்றது. அதாவது பொய் சொல்வது ஒன்றும் பெரிய தீமை அல்ல என்று அவர்கள் கருதுகின்றனர். இதன் விளைவாக இந்தக் குழந்தைகள் பெரியவர்களாக ஆகும் போது எங்கெல்லாம் அவர்களுக்கு இவ்வாறு பொய் கூறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமோ அப்போது அவர்கள் தங்களது ஒப்பீடு செய்து பார்க்கும் ஆற்றலைப் பயன்படுத்தும் போது அந்த ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஆற்றலானது இப்போது அபாயம் அதிகமாக இருக்கின்றது. எனவே, நீ பொய் சொல். இதில் எந்தத் தவறும் இல்லை என்று முடிவெடுக்க வைக்கின்றது.

இவ்வாறே புறம் பேசுவது இருக்கின்றது. ஒரு சிறுவன் தனது அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் புறம் பேசுவதைப் பார்க்கும் போது எல்லா மக்களும் புறம் பேசுகின்றனர் என்று நினைக்கின்றான். அவன் பெரியவனாகும் போது புறம் பேசுகின்ற ஒரு சந்தர்ப்பம் வருகின்ற போது நான் புறம் பேசினால் எனக்கு அதனால் பலன் கிடைக்கும் என்று அவர் கருதினால் அவனது ஒப்பீடு செய்து பார்க்கும் ஆற்றலானது அவனிடம் உனக்கு அக்கம்பக்கத்திலுள்ள எல்லாருமே புறம் பேசுகின்றனர். நீ புறம் பேசினால் அதனால் என்ன? என்று கேட்கின்றது. மேலும் இது பாவம்தான். ஆனால் அந்த அளவு பெரிய பாவம் அல்ல என்று அது அவனிடம் கூறுகின்றது.

இதுபற்றி கடந்த ஒரு குத்பாவில் நான் கூறியிருந்தேன். செயல் சீர்திருத்தத்திற்குப் பெரும் தடையாக இருக்கும் ஒரு விஷயம் சில பாவங்கள் பெரியது என்றும் சில பாவங்கள் சிறியது என்றும் அவற்றைச் செய்வதில்

எந்தத் தவறும் இல்லை என்றும் கருதுவதாகும். ஒருமுறை மனிதன் இந்தப் பாவங்களைச் செய்து விட்டால் பிறகு இந்தப் பாவங்களை மனிதனால் விட்டு விட முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் மனிதனிடம் ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஆற்றல் இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் சுற்றுச்சூழல் அவனுக்கு வழங்குகின்ற இந்த தவறான அறிவின் காரணமாக மனிதனுக்கு அது அவன் பாவங்கள் மீது வெற்றி பெறுவதற்குத் தேவையான அளவில் ஆற்றலை வழங்காது. பாரமான பொருளைத் தூக்குகின்ற உதாரணத்தில் கூறியிருந்தது போன்றே பலவீனமான ஆற்றலுள்ள ஒருவரால் அதை தூக்க முடியவில்லை. ஆனால் மூளையானது அதிக எடையுள்ள பொருளைத் தூக்குவதற்கான ஆற்றலை அனுப்பியதும் அதே கை அதிக எடையுள்ள அந்தப் பொருளைத் தூக்குவதற்குத் தகுதியுடையதாக ஆகிவிட்டது. ஆனால் மனிதனிடமுள்ள ஒப்பீடு செய்கின்ற ஆற்றலானது இந்தக் கட்டளையை மூளைக்கு அனுப்பாமல் இருந்தால் பிறகு அவனால் அதிக எடையுள்ள இந்த பொருளைத் தூக்கியிருக்க முடியாது. பாவங்களை அழிப்பதற்கும் இதே வழிமுறைதான உள்ளது. பாவங்களை அழிப்பதற்கான ஆற்றல் மனிதனிடம் இருக்கின்றது. ஆனால் பாவம் கண் முன்னால் வரும்போது மனிதனிடமுள்ள ஒப்பீடு செய்து பார்க்கும் ஆற்றலானது இந்தப் பாவத்தைச் செய்வதால் என்ன நேர்ந்துவிடப் போகின்றது. இது ஒரு சாதாரண பாவம் தான். இதை செய்வதால் அதிக பலன் கிடைக்கும் என்று அவனிடம் கூறும்போது பிறகு மூளையானது பாவங்களை அழிப்பதற்கான ஆற்றலை அனுப்பி வைக்காது. அந்த உணர்வே அவனிடம் மரணித்துப் போய் விடும். அல்லது இதனை எண்ணத்தின் ஆற்றலே அழிந்து விட்டது என்றும் நாம் கூறலாம். இதனால் பாவம் செய்யப்படுகின்றது.

எனவே, செயல் சீர்திருத்தத்திற்காக மூன்று விஷயங்களை வலுவடையச் செய்ய வேண்டியது அவசியமானதாகும். ஒன்று, எண்ணத்தின் ஆற்றலை வலுப்பெறச் செய்வது அவசியமானதாகும். அறிவை அதிகப்படுத்துவது அவசியமானதாகும். செயல் ஆற்றலில் சக்தியை உருவாக்குவதும் அவசியமானதாகும். அறிவை அதிகமாக்குவதும் உண்மையில் எண்ணத்தில் ஆற்றலின் ஒரு பகுதியே ஆகும் என்பதையும் நினைவில் வைக்க வேண்டும். ஏனென்றால் அறிவு அதிகமாக அதிகமாக எண்ணத்தின் ஆற்றலும் வளர்ச்சி அடைகின்றது. அது செயலாற்ற ஆரம்பித்து விடுகின்றது என்றும் கூறலாம். இந்த எல்லா விஷயங்களின் சுருக்கம் இதுதான். செயல் சீர்திருத்தத்திற்காக நமக்கு மூன்று விஷயங்களின் தேவைப்படுகின்றன. முதலாவதாக, எண்ணத்தின் ஆற்றல் மூலமாக கிடைக்கும் சக்தியாகும். அது பெரும் பெரும் பணிகளைச் செய்வதற்குத் தகுதியுடையதாக இருக்கும். அறிவு அதிகமாவது நமது எண்ணத்தின் ஆற்றலை தமது பொறுப்பை உணர வைக்கின்றது. எது சரி? எது தவறு? என்பதை உணர்த்துகின்றது. எது சரியோ அதற்கு ஆதரவாக நிற்க வேண்டும். அதை செயல்படுத்துவதற்கு தனது முழு வலிமையையும் பயன்படுத்த வேண்டும். கவனமற்ற நிலையில் இருந்தவாறு இந்த சந்தர்ப்பத்தை இழந்துவிடக் கூடாது. மூன்றாவதாக, செயலின் ஆற்றல் மூலம் கிடைக்கும். சக்தியாவது நமது உடல் உறுப்புகளை நமது நல்ல எண்ணத்திற்கு ஏற்ப செயல்பட வைக்க வேண்டும். தீய எண்ணத்திற்கு ஏற்ப செயல்படக் கூடாது. அதன் கட்டளைகளை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்துவிடக் கூடாது. இந்த விஷயங்கள் பாவங்களிலிருந்து வெளியேறுவதற்கும் செயல்களின் சீர்திருத்தத்திற்கும் தேவையான அடிப்படை வழிகளாகும். நமது எண்ணத்தின் ஆற்றலை ஒரு மேலதிகாரியைப் போன்றதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். தனது கட்டளையை தனது சக்தி, ஆற்றல், தனது வழிமுறை ஆகியவற்றிற்கேற்ப ஏற்றுக் கொள்ள வைக்கின்ற அந்த சிறந்த மேலதிகாரிக்கு ஒப்பானதாக அதனை ஆக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு எதிரான எந்த விஷயமும் தன்னை மிகைத்து நிற்பதற்கு அவர் விடுவதில்லை. நமது சிறிய பெரிய பாவம் என்று நமது உள்ளம் கூறும் விளக்கங்களை ஏற்று அவை நம்மீது வெற்றி பெறுவதிலிருந்தும் அவற்றை நாம் தடுக்க வேண்டும். சரியான அறிவு நம்மை ஒப்பீடு செய்து பார்க்கின்ற ஆற்றலின் தவறினால் ஏற்படுகின்ற தோல்விகளிலிருந்தும் நம்மை பாதுகாத்து வைக்கும். இதற்கான உதாரணத்தை நான் கூறி விட்டேன். அந்த உணர்வே மரணித்துப் போய் விடும்.

பிறகு எது பெரிய பாவம்? எது சிறிய பாவம்? என்ற சர்ச்சையில் மனிதன் ஈடுபட்டு விடுகின்றான். இதனால் சீர்திருத்தம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அவனது கையை விட்டும் நழுவி விடுகின்றது. சில நேரங்களில் இப்படியும் நடக்கின்றது. அறிவு இல்லாததால் எண்ணத்தின் ஆற்றலால் என்ன செய்வது? அல்லது என்ன செய்ய வேண்டும்? என்று முடிவெடுக்க முடியாமல் போய் விடுகின்றது. இவ்வாறே செயல் ஆற்றல் வலுப்பெற்றால் அது எண்ணத்தின் ஆற்றலின் சிறு சிறு சைகைகளைக் கூட ஏற்றுக் கொள்ளும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த ஒரு கருத்தையும் கூறியுள்ளார்கள். அதாவது இங்கு விஷயத்தையும் நினைவில் வைக்க வேண்டும். செயல் ஆற்றலிலுள்ள பலவீனம் இரு வகைப்படும். அவை உண்மையானவை மற்றும் உண்மை அல்லாதவை.

உண்மை அல்லாதவை எது என்றால் ஆற்றல் இருந்தும்கூட பழக்கவழக்கத்தின் காரணமாக அதில் துருப்பிடித்திருக்கும். உண்மையானவை எது என்றால் ஒரு நீண்ட காலம் அதை பயன்படுத்தாமல் இருந்ததன்

காரணமாக அது மரணித்தவர் போன்று ஆகிவிட்டது. அதற்கு வெளியிலிருந்து உதவியும் ஆதரவும் தேவைப்படுகின்றது. உண்மை அல்லாதவைக்கான உதாரணம் ஒரு மனிதனால் 40 கிலோ எடையுள்ள ஒரு பொருளைத் தூக்க முடியும். ஆனால் பணி செய்யும் பழக்கம் இல்லாத காரணத்தால் அவரிடம் அந்த சுமையைச் சுமக்கும்படி கூறும் போது அவருக்கு அதனால் கவலை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட நபர் தன்னை வற்புறுத்தி அதில் ஈடுபட வைத்தால் பிறகு அந்த சுமையைச் சுமப்பதற்கான தகுதி அவருக்கு கிடைத்து விடும். அந்த செயலில் அவருக்கு வெற்றி கிடைக்கும்.

உண்மையானவற்றிற்கான உதாரணம் எதுவென்றால் நீண்ட காலமாக பணி செய்யாமல் இருந்ததன் காரணமாக பணி செய்வதற்கான ஆற்றலே மனிதனிடம் எஞ்சியிருப்பதில்லை. பிறகு அவனிடம் 10 கிலோவை விட அதிகமான எடையை சுமப்பதற்கான சக்தி இருக்காது. அப்படிப்பட்ட நபருக்கு அதிக எடையுள்ள பொருளைத் தூக்குவதற்கு உதவியாளர்கள் தேவைப்படுவார்கள். அவரது சீர்திருத்தத்திற்காக வேறு சில வழிமுறைகளைக் கையாள வேண்டும். அவரது எண்ணத்தின் ஆற்றலை அதிகப்படுத்துவதற்கும் செயல் ஆற்றலை அதிகப்படுத்துவதற்கும் நாம் இதை செய்ய வேண்டும்.

சுருக்கமாக, ஆற்றலின் பொக்கிஷம் இல்லாமல் ஆகிவிடும் போது அந்த சமயத்தில் வெளியிலிருந்து சில வழிமுறைகளைக் கையாள வேண்டியது வரும். அதன் மூலம் பணியை நாம் நிறைவு செய்ய முடியும். செயல்களின் சீர்திருத்தத்தின் நிலையும் இவ்வாறானது தான். பலவகைப்பட்ட மக்களுக்கு பல வகையான சிகிச்சைகள் அவசியமானதாகும். ஒரே சிகிச்சை எல்லாருக்கும் பொருந்தி வராது. சிலரிடம் எண்ணத்தின் ஆற்றலை உருவாக்க வேண்டியது அவசியமானதாகும். சிலரிடம் செயல் ஆற்றலை உருவாக்குவது அவசியமானதாகும். சிலருக்கு சுமை அதிகமாக இருந்தால் அது அவரது சக்திக்கு அப்பாற்பட்ட சுமையாக இருந்தால் வெளியிலிருந்து அவருக்கு உதவி தேவைப்படும். அப்போது சமுதாயம் தனது கடமையை நிறைவேற்ற வேண்டும். ஜமாஅத்தும் கிளை அமைப்புகளும் தனது கடமையைச் செய்ய வேண்டும்.

எனவே, நாம் நமது செயல் சீர்திருத்தத்திற்காக இந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். இந்த விஷயங்களை உருவாக்க வேண்டியது அவசியமானதாகும். தமது எண்ணத்தின் ஆற்றலை வலுப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். செயல் ஆற்றலை வலுப்படுத்த வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாக ஆவோமாக! அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள ஆற்றல்களிலும் தகுதிகளிலும் துருப்பிடித்து அது அழிந்து விடக் கூடாது. வருங்காலத்தில் இதற்கு மேலும் நான் விளக்கங்களைக் கூறுவேன் இன்ஷா அல்லாஹ்.

இறுதியில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கட்டளைகளை எடுத்துக் கூறுகின்றேன். ***ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:***

அல்லாஹ்விடம் தன்னிடம் சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்று விரும்பிக் கேட்பதும் அதற்காக தனது ஆற்றலைச் செலவழிப்பதும் ஆகிய இவையே ஈமானின் வழிமுறையாகும்.

அல்லாஹ்விடம் சீர்திருத்தத்தை வேண்டுவது என்பது தனது எண்ணத்தின் ஆற்றலை துஆ மூலமாக வலுப்படுத்துவதாகும். ஆற்றலை செலவிடுவது என்பது எண்ணத்தில் ஆற்றல் மற்றும் செயலின் ஆற்றலை வெளிப்படுத்துவதாகும். உயர்வான தகுதியில் இவற்றை நாம் வெளிப்படுத்திக் காட்டும்போது இதுவே ஈமானாகும். பிறகு மனிதன் ஒவ்வொரு பணியையும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக செய்கின்றான். அதன் பக்கம் அவனது கவனம் இருக்கும்.

***பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:***

நீங்கள் உங்களது செயல் முன்மாதிரியை மட்டும் காட்டுங்கள். அதில் எத்தகு பிரகாசம் இருக்க வேண்டும் என்றால் மற்றவர்கள் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனென்றால், எதுவரை அதில் பிரகாசம் இருக்காதே எதுவரை எவரும் அதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எதுவரை உங்களது அந்தரங்க நிலைமையில் தூய்மையும் பிரகாசமும் இருக்காதோ அதுவரை எவரும் அதனை வாங்க மாட்டார்கள். எதுவரை உங்களது ஒழுக்கம் உயர்ந்த தகுதியில் இருக்காதோ அதுவரை எந்தத் தகுதியையும் நீங்கள் அடைய முடியாது.

எனவே, செயல்களின் சீர்திருத்தத்திற்காக அதிகமாக உழைப்பதும் தொடர்ந்து கண்காணித்து வருவதும் அவசியமானதாகும். அதன் மூலம் ஒவ்வொரு அஹ்மதியும் தான் அஹ்மதியானதன் நோக்கத்தை நிறைவேற்ற முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது விருப்பத்திற்கு ஏற்ப நாம் நம்மை உண்மையான முஸ்லிம்களாக ஆக்க முடியும். அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

தொழுகைகளுக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். இந்தியாவிலுள்ள கல்கத்தாவைச் சார்ந்த மாஸ்டர் மஸ்ரிக் அலி சாஹிப் எம்.ஏ அவர்களுடைய ஜனாஸா ஆகும். 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் தேதி ஏறக்குறைய தமது 80 –வது வயதில் இவர்கள் காதியானில் வஃபாத் ஆகியுள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அவர்கள் கடந்த ஒரு வருடமாக அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தார்கள். சிகிச்சைக்காக அவரை அவரது மகன் ஜப்பானுக்கு கொண்டு சென்றார்கள். பிறகு ஓரளவு சுகம் கிடைத்தது. பிறகு தனது மகளுடன் காதியானில் இருந்து வந்தார்கள். 1965 ஆம் ஆண்டு பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைகின்ற நற்பாக்கியம் அவர்களுக்கு கிடைத்தது. வாழ்வின் இறுதி நொடிகள் உள்ள வரை பைத்தியக்காரரைப் போன்று அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் இவர் ஈடுபட்டு வந்தார். இவர்கள் மார்க்கத் தொண்டுகள் புரிந்த காலக்கட்டம் 48 வருடங்களாகும். தப்லீக் செயலர், காயித் குத்தாமுல் அஹ்மதிய்யா, பெங்காலின் நாஸிம் அன்ஸாருல்லாஹ், கொல்கத்தாவின் அமீர் மற்றும் துணை அமீர் ஆகவும் ஒரு நீண்ட காலமாக பெங்கால் மற்றும் அஸ்ஸாம் மாநில அமீராகவும் தொண்டாற்றக்கூடிய வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. இவ்வாறு நேபாளத்தில் தப்லீக் பணிகளைக் கண்காணிப்பவராகவும் அஞ்சுமன் வக்ஃபே ஜதீத் காதியானின் உறுப்பினராகவும் இவர்கள் இருந்து வந்தார்கள். வங்காள மொழியில் அல்புஸ்ரா என்ற பத்திரிகையை மிகுந்த உழைப்புடன் இவர்கள் வெளியிட்டு வந்தார்கள். தாமே அவற்றை தபாலில் மக்களுக்க அனுப்பி வைப்பார்கள்.

***மதிப்பிற்குரிய நாஸிர் சாஹிப் அஃலா காதியான் இனாம் கோரி சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்:***

நான் அவர்களுடன் பெங்காலிலும் அஸ்ஸாமிலும் பல இடங்களில் பயணம் செய்துள்ளேன். அபாயம் நிறைந்த சூழ்நிலையில் கூட கூட்டங்களை நடத்துவதிலிருந்தும் சொற்பொழிவுகளை நிகழ்த்துவதில் இருந்தும் அவர்கள் விலகியிருக்கவில்லை. மூன்று முறை மிகவும் இக்கட்டான நிலையில் என்னுடன் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான ஏற்பாட்டை அல்லாஹ் செய்திருந்தான். வண்டிக்கும் பொருள்களுக்கும் இழப்பு ஏற்பட்டது. ஆனால் சகோதரர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருந்தனர். அவர்கள் அபாயம் நிறைந்த பல இடங்களுக்கும் எவ்வித அச்சமுமின்றி எங்களை கொண்டு செல்வார்கள். அவர்களுடன் சுற்றுப் பயணத்தில் இருக்கும் போது ஒவ்வொரு இடத்திலும் வெளிப்பட்ட இறை உதவியின் அடையாளங்கள் பற்றிய விஷயங்களைப் பேசிக் கொண்டிருப்போம். பெங்காலிலும் அஸ்ஸாமிலும் பல்வேறு இடங்களில் மர்ஹூமின் காலகட்டத்தில் ஜமாஅத்துகள் நிறுவப்பட்டன. மிகவும் தைரியமான இறைவன் மீது நம்பிக்கை வைத்திருந்த எளிமையான இயல்புடைய மனிதராக அவர்கள் இருந்தார்கள்.

மர்ஹூம் வஸிய்யத் செய்தவராவார். காதியானிலுள்ள பெஹஷ்தி மக்பராவில் இவர் நல்லடக்கம் செய்யப்பட்டார். இவர்களுக்கு 3 மகள்களும் 2 மகன்களும் உள்ளனர். ஒரு மகனை ஏறக்குறைய அஹ்மதிய்யா ஜமாஅத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தெரியும். அவர்கள் இஸ்மத்துல்லாஹ் சாஹிப் ஆவார்கள். ஆண்டு மாநாட்டின் போது இவர்கள் நஸ்ம் படிப்பார்கள். M.T.A. விலும் இவர்களது நஸம்கள் வந்துள்ளன.

அல்லாஹ் மர்ஹூமின் தகுதிகளை உயர்த்துவானாக! இவர்களது பிள்ளைகளுக்கும் இவர்கள் செய்த நன்மைகளை தொடர்ந்து செய்வதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**பிழை திருத்தம்**

*03.01.2014* குத்பாவின் முதல் பக்கத்தின் கடைசி வரிக்கு முந்தைய வரியில் ‘மூளையில்’ என்று தவறுதலாக டைப் ஆகி உள்ளது. சகோதரர்கள் இதனை ‘மூலையில்’ என்று திருத்தி வாசிக்கவும்.

**JUMUA KHUTBA**
**HAZRAT KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH Mosque, London.
on **10.01.2014**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD Sb.
Typeset by : A. MUHAMMAD NISAR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005. TELEFAX : 0462 - 2352456